# தமிழகத்தில் 12 இடங்களில் வெயில் சதம்

**வேலூரில் 106 டிகிரி**

**சென்னை, ஜூலை 15:** தமிழகத்தில் 12 இடங்களில் புதன்கிழமை 100 டிகிரி ஃபாரன்ஹீட் கடந்து வெப்பம் பதிவானது. அதிகபட்சமாக வேலூரில் 106.88 டிகிரி ஃபாரன்ஹீட் வெயில் கொளுத்தியது.

இது குறித்து சென்னை வானிலை மையம் புதன்கிழமை வெளியிட்ட செய்திக் குறிப்பு: மேற்குதிசை காற்றின் வேகமாறுபாடு காரணமாக, வியாழக்கிழமை (ஜூலை 16), மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் லேசானது முதல் மிதமான மழையும், தமிழகம், புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளில் பொதுவாக வறண்ட வானிலை நிலவக்கூடும். அவ்வப்போது ஓரிரு இடங்களில் லேசான மழைக்கு வாய்ப்புள்ளது.

ஜூலை 17, ஜூலை 20-இல் மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்கள், வடக்கு கடலோர தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும், புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் லேசானது முதல் மிதமான மழைக்கு வாய்ப்புள்ளது. தமிழகத்தில் ஓரிரு இடங்களில் லேசான மழை பெய்யக்கூடும்.

**12 இடங்களில் வெயில் சதம்:** தமிழகத்தில் 12 இடங்களில் 100 டிகிரி ஃபாரன்ஹீட் கடந்து வெப்பம் பதிவானது.

அதிகபட்சமாக வேலூரில் 106.88 டிகிரி ஃபாரன்ஹீட் வெப்பம் பதிவானது. மதுரை விமான நிலையத்தில் 105.8, மதுரை நகரம் 104.72, சென்னை மீனம்பாக்கம் 104.18, திருத்தணி 104, பாளையங்கோட்டை 103.1, ஈரோடு, சென்னை நுங்கம்பாக்கம் தலா 102.94, திருச்சி 101.66, புதுச்சேரி 100.76, தஞ்சாவூர் 100.4, காரைக்கால் 100.04 டிகிரி ஃபாரன்ஹீட் வெப்பம் பதிவானது.

**மீனவர்களுக்கு எச்சரிக்கை:** வியாழக்கிழமை (ஜூலை 16), தமிழக கடலோரப் பகுதிகள், மன்னார்வளைகுடா மற்றும் அதனையொட்டிய குமரிக்கடல் பகுதிகளில் சூறாவளிக்காற்று 65கி.மீட்டர் வேகத்தில் வீசக்கூடும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இனாம் நிலப் பிரச்னைக்கு தீர்வுகாண தனி ஆணையம்

## முதல்வர் விஜய்யிடம் பெ.சண்முகம் வலியுறுத்தல்



சென்னை தலைமைச் செயலகத்தில் முதல்வர் ஜோசப் விஜய்யை புதன்கிழமை சந்தித்து கோரிக்கை மனு அளித்த மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயலர் பெ.சண்முகம். உடன் தேனி மாவட்டச் செயலர் எம்.பி.ராமச்சந்திரன், மாவட்ட செயற்குழு உறுப்பினர் ஜி.எம்.நாகராஜன், தமிழ்நாடு மலைவாழ் மக்கள் சங்கத்தின் மாநிலத் தலைவர் பி.டில்லிபாபு, தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின் தேனி மாவட்டச் செயலர் டி.கண்ணன், விவசாயிகள் மு.தங்கமலை, ஏ.லிங்கம், மருதுபாண்டி.

**சென்னை, ஜூலை 15:** இனாம் நிலப் பிரச்னைக்கு தீர்வுகாண தனி ஆணையம் அமைக்க வேண்டும் என்று முதல்வர் ஜோசப் விஜய்யிடம் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயலர் பெ.சண்முகம் நேரில் வலியுறுத்தினார்.

முதல்வர் ஜோசப் விஜய்யை பெ. சண்முகம் தலைமைச் செயலகத்தில் புதன்கிழமை சந்தித்துப் பேசினார். அவருடன், தமிழ்நாடு மலைவாழ் மக்கள் சங்கத்தின் மாநிலத் தலைவர் பி.டில்லிபாபு, தமிழ்நாடு விவசாயிகள் சங்க மாவட்டச் செயலர் டி.கண்ணன் உள்ளிட்டோரும் உடனிருந்தனர்.

பின்னர், செய்தியாளர்களிடம் பெ.சண்முகம் கூறியதாவது: களக்காடு முண்டந்துறை, ஸ்ரீவில்லிபுத்தூர் - மேகமலை புலிகள் சரணாலயம், கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள வனங்களில் வாழும் மக்களை ஆக. 28-ஆம் தேதிக்குள் வெளியேற்ற வேண்டும் என மே 29-ஆம் தேதி உச்சநீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. தமிழகத்தில் வன உரிமைச் சட்டம் 2016 முழுமையாக அமல்படுத்தப்படாமல் உள்ளது. இந்தச் சட்டம் வந்து 20 ஆண்டுகளாகிறது. இந்த சட்டத்தைப் பயன்படுத்தி இதுவரை 35,000 குடும்பங்களுக்குத்தான் பட்டா வழங்கப்பட்டுள்ளது. தேனி மாவட்டம் வருசநாடு, கடமலைக்குண்டு உள்ளிட்ட பகுதிகளில் மட்டும் 98 கிராமங்களில் இருந்து மக்களை வெளியேற்ற உச்சநீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. அந்த மாவட்டம் முழுவதும் பதற்றம் நிலவுகிறது. எனவே தமிழ்நாடு அரசு உச்சநீதிமன்றத்தில் மறுசீராய்வு மனு தாக்கல் செய்ய வேண்டும்.

மேலும், கரூர் மாவட்டத்தில் 4 கிராமங்களில் உள்ள இனாம் நிலத்தை கோயில் நிலம் என்று தவறாக சித்திரித்து பத்திரப் பதிவுக்கு தடை விதிக்கப்பட்டிருந்தது. இத்தகைய சூழலில் கரூர் மாவட்டத்தில் 4 கிராமங்களுக்கு விதிக்கப்பட்டிருந்த தடையைத் தமிழக அரசு கடந்த 9-ஆம் தேதி புதிய அரசாணையை வெளியிட்டது. இதை வரவேற்கிறோம். தமிழகம் முழுவதும் இனாம் நிலத்தைப் பயன்படுத்தும் மக்களின் பிரச்னைகளுக்கு நிரந்தர தீர்வுகாண தனி ஆணையத்தை அமைக்க வேண்டும் என் முதல்வரிடம் வலியுறுத்தினோம். எங்கள் கோரிக்கைகளை பரிசீலிப்பதாக முதல்வர் உறுதியளித்தார் என்றார்.

# சிறையில் விசாரணை கைதி உயிரிழந்த வழக்கு: சக கைதிகள் 8 பேர் கைது

## 3 வார்டன்கள் இடைநீக்கம்

**நாகர்கோவில், ஜூலை 15:** நாகர்கோவில் சிறையில் விசாரணை கைதியான மாற்றுத் திறனாளி உயிரிழந்தது தொடர்பான வழக்கில், சக கைதிகள் 8 பேர் கைது செய்யப்பட்டனர். ஏற்கெனவே கைது செய்யப்பட்ட 3 வார்டன்கள் பணியிடைநீக்கம் செய்யப்பட்டனர்.

கன்னியாகுமரி மாவட்டம், வடக்கு தாமரைகுளத்தை அடுத்த ஈத்தன்காட்டைச் சேர்ந்த மாற்றுத்திறனாளி சபரிவர்மன்(33) தனது பெட்டிக்கடையில், தடைசெய்யப்பட்ட புகையிலைப் பொருள்கள் விற்பனை செய்ததாக தென்தாமரைகுளம் போலீஸாரால் கடந்த 9- ஆம் தேதி கைது செய்யப்பட்டு நாகர்கோவில் கிளை சிறையில் அடைக்கப்பட்டிருந்தார்.

கடந்த 13-ஆம் தேதி அவர் உடல்நலக்குறைவால் ஆசாரிப்பள்ளம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் உயிரிழந்ததாக அவரது உறவினர்களிடம் தகவல் தெரிவிக்கப்பட்டது. ஆனால், சபரிவர்மனை போலீஸார் அடித்துக் கொன்றுள்ளதாக அவரது குடும்பத்தினர் குற்றம்சாட்டி, உடலை வாங்க மறுத்து போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்நிலையில் நாகர்கோவில் சிறையிலும், அவரது மனைவி, தாய் மற்றும் உறவினர்களிடமும் நாகர்கோவில் 2 ஆவது குற்றவியல் நீதிமன்ற நீதிபதி தியூஜ்பீர்த்தி விசாரணை மேற்கொண்டார்.

மாவட்ட காவல் கண்காணிப்பாளர் இரா.ஸ்டாலினும் அச்சிறையில் விசாரணை மேற்கொண்டார்.

**19 இடங்களில் காயம்:** இதனிடையே, பிரேத பரிசோதனையில், சபரிவர்மனின் உடலில் 19 இடங்களில் காயங்கள் இருப்பதும், அவர் அடித்துக் கொல்லப்பட்டதும் உறுதிசெய்யப்பட்டது.

**3 வார்டன்கள் கைது:** அதன்பேரில் நேசமணிநகர் போலீஸார் கொலை வழக்குப் பதிந்து, நாகர்கோவில் சிறையின் முதன்மை வார்டன் திருநெல்வேலி மாவட்டம், களக்காட்டைச் சேர்ந்த திருமலைநம்பி, வார்டன்கள் கன்னியாகுமரிமாவட்டம், தேங்காய்ப்பட்டினம் ஜெகன், சாமியார்மடம் சிவகுமார் ஆகியோரை கைது செய்தனர்.

அவர்களிடம் நடத்திய விசாரணையில், சம்பவத்தன்று சபரிவர்மனுக்கும் சக கைதிகள் சிலருக்கும் இடையே தகராறு ஏற்பட்டுள்ளது. அப்போது, சக கைதிகள் அவரை தாக்கியதுடன் அவரது கை, கால்களை கட்டி சிறை வார்டன்களும் தாக்கியதில் அவர் உயிரிழந்தது தெரியவந்தது.

இதைத் தொடர்ந்து, அவரை தாக்கிய சக கைதிகளான உண்ணாமலைகடையைச் சேர்ந்த விஜயகுமார் மகன் விஜேஷ் (21), ராஜாக்கமங்கலம் துறை, சுனாமி காலனியைச் சேர்ந்த அன்னமரியான் மகன் சாரதி (19), திற்பரப்பு நகராண்டிவிளை அச்சுதன் மகன் ஜெகன் (40) செக்கொடி முதலியார் குட்டிவிளை ஜஸ்டின் மகன் சரத் (20), இரணியல் கணேசன் மகன் சேதுராம் (30), கொட்டாரம் அருள்தாஸ் மகன் அஜித் (29), அகஸ்தீஸ்வரம் ராஜா மகன் அரவிந்த் (27), களக்காடு ராமகிருஷ்ணன் மகன் பெரியபெருமாள்(36) ஆகிய 8 பேர் மீது கொலை, கொடூர தாக்குதல் உள்ளிட்ட 8 பிரிவுகளின் கீழ் வழக்குப் பதிந்து அவர்களை போலீஸார் கைது செய்தனர்.

**பணியிடை நீக்கம்:** இதனிடையே, நாகர்கோவில் குற்றவியல் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்ட 3 வார்டன்களும் 15 நாள்கள் காவலில் வைக்க நீதிபதி உத்தரவிட்டார். அவர்கள் நாங்குனேரி சிறையில் அடைக்கப்பட்டனர். அவர்கள் 3 பேரையும் பணியிடை நீக்கம் செய்து சிறைத்துறை டிஐஜி உத்தரவிட்டுள்ளார்.

**மறியல்:** சபரிவர்மனின் மரணத்துக்கு நீதி வேண்டும், அவரது குடும்பத்தில் ஒருவருக்கு அரசு வேலை மற்றும் உரிய நிவாரணம் வழங்க வேண்டும் என வலியுறுத்தி, அவரது உறவினர்கள் கன்னியாகுமரி நான்குவழிச் சாலையில் புதன்கிழமை இரவு மறியலில் ஈடுபட்டனர்.

# காவல் மரணங்களுக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும்



**சென்னை, ஜூலை 15:** காவல் மரணங்களுக்கு முற்றுப்புள்ளி வைக்கும் தமிழக அரசு உறுதியான நடவடிக்கை எடுக்க வேண்டும் என தேமுதிக பொதுச் செயலர் பிரேமலதா விஜயகாந்த் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் புதன்கிழமை வெளியிட்ட அறிக்கை:

கன்னியாகுமரி மாவட்டம் ஈத்தன்காடு பகுதியைச் சேர்ந்த மாற்றுத்திறனாளி சபரிவர்மன் தடை செய்யப்பட்ட குட்கா புகையிலை பொருள்கள் விற்றதாக கைது செய்யப்பட்டு, திங்கள்கிழமை (ஜூலை 13) மர்மமான முறையில் உயிரிழந்துள்ளது அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. இது தொடர்பாக காவல் துறையைச் சேர்ந்த 3 பேரை பணியிடை நீக்கம் செய்திருப்பது தீர்வாகாது. தமிழகத்தில் எங்குமே காவல் மரணங்கள் நிகழாத வகையில் தமிழக அரசு உறுதியான நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இந்தக் கொடூரமான குற்றத்தில் ஈடுபட்டவர்களுக்கு ஆயுள் தண்டனை வழங்க வேண்டும். உயிரிழந்தவரின் குடும்பத்தில் ஒருவருக்கு அரசு வேலையும், ரூ.25 லட்சம் நிவாரணமும் வழங்க வேண்டும் எனத் தெரிவித்துள்ளார்.

# மின்வாரியத் தலைவர் உள்பட 19 ஐஏஎஸ் அதிகாரிகள் பணியிடமாற்றம்

**சென்னை, ஜூலை 15:** தமிழகத்தில் 19 ஐஏஎஸ் அதிகாரிகள் பணியிடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர். இதற்கான அரசாணையை தலைமைச் செயலர் எம். சாய்குமார் வெளியிட்டுள்ளார். அதன் விவரம்:(அடைப்புக்குறிக்குள் முந்தைய பதவி)

1. பிரதீப் யாதவ் - குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை கூடுதல் தலைமைச் செயலர் (தகவல் தொழில்நுட்பம் மற்றும் எண்ம சேவை கூடுதல் தலைமைச் செயலர்)
2. அதுல் ஆனந்த் - தகவல் தொழில்நுட்பம், எண்ம சேவை கூடுதல் தலைமைச் செயலர் (குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை கூடுதல் தலைமைச் செயலர்)
3. தீரஜ் குமார் - உயர்கல்வித் துறை கூடுதல் தலைமைச் செயலர் (தொழில்முனைவோர் மேம்பாட்டு மற்றும் புத்தாக்க நிறுவன ஆணையர்)
4. காகர்லா உஷா - சுற்றுலா, காலநிலை மாற்றம் வனத் துறை கூடுதல் தலைமைச் செயலர் (பொது மற்றும் மறுவாழ்வுத் துறை கூடுதல் தலைமைச் செயலர்)
5. இ.சுந்தரவல்லி - பொது மற்றும் மறுவாழ்வுத் துறை செயலர் (பொது மற்றும் மறுவாழ்வுத் துறை சிறப்புச் செயலர்)
6. நிர்மல்ராஜ்-போக்குவரத்து துறைச் செயலர் (தொழில் ஆணையர் மற்றும் தொழில் மற்றும் வணிகத் துறை இயக்குநர்)
7. பி.உமாநாத்-தொழில் ஆணையர், தொழில் மற்றும் வணிகத் துறை இயக்குநர் (தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் தலைவர், மேலாண்மை இயக்குநர்)
8. சிசி தாமஸ் வைத்யன்-போக்குவரத்து மற்றும் சாலைப் பாதுகாப்புத் துறையின் முதன்மைச் செயலர் (வருவாய் நிர்வாகம் மற்றும் பேரிடர் மேலாண்மை ஆணையரகத்தின் கீழ் செயல்படும் தமிழ்நாடு பேரிடர் அபாயக் குறைப்பு முகமையின் முதன்மைச் செயலர்)
9. எம். வள்ளலார் - தொழிலாளர் ஆணையர் (போக்குவரத்துத் துறை செயலர்)
10. ஆர்.கஜலட்சுமி-மது விலக்கு மற்றும் ஆயத்தீர்வை ஆணையர் (நில நிர்வாக ஆணையர்)
11. மகேஸ்வரி ரவிக்குமார் - கலை மற்றும் பண்பாட்டுத் துறை இயக்குநர் (சமூக நலத்துறை இயக்குநர்)
12. டி.ரத்னா - இந்து சமய அறநிலையத் துறையின் கூடுதல் ஆணையர் (வீட்டுவசதி மற்றும் நகர்ப்புறவளர்ச்சித் துறையின் கூடுதல் செயலர்)
13. டி.பாஸ்கர பாண்டியன்-அருங்காட்சியகங்கள் இயக்குநர் (போக்குவரத்து மற்றும் சாலைப் பாதுகாப்புத் துறை இயக்குநர்)
14. ஆர்.பிருந்தா தேவி - சமூக நலத் துறை இயக்குநர் (கலை மற்றும் பண்பாட்டுத் துறை இயக்குநர்)
15. சுப்ரியா சாகு - தொழில் முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனத்தின் கூடுதல் தலைமைச் செயலர் (சுற்றுச்சூழல், பருவநிலை மாற்றம் மற்றும் வனத் துறை கூடுதல் தலைமைச் செயலர்)
16. ஜெ.ராதாகிருஷ்ணன்-அண்ணா நிர்வாகப் பணியாளர் கல்லூரியின் இயக்குநர் (தமிழ்நாடு மின்சார வாரியத்தின் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு மின் பகிர்மானக் கழகத்தின் கூடுதல் தலைமைச் செயலர்)
17. வி.அருண் ராய்-தமிழ்நாடு மின்சார வாரியத்தின் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு மின் பகிர்மானக் கழகத்தின் கூடுதல் தலைமைச் செயலர் (உயர்கல்வித் துறையின் அரசுச் செயலர்)
18. பூஜா குல்கர்னி-தமிழ்நாடு உள்கட்டமைப்பு மேம்பாட்டு வாரியத்தின் தலைமைச் செயல் அலுவலர் (மது விலக்கு மற்றும் ஆயத்தீர்வை ஆணையர்)
19. வாகே சங்கேத் பல்வந்த் - தமிழ்நாடு தொழில் மேம்பாட்டுக் கழகத்தின் செயல் இயக்குநர் (கோவை மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் கூடுதல் ஆட்சியர்)


**பஞ்சாப் நேஷனல் வங்கி** ...the name you can BANK upon !

SAMB சென்னை, 4வது தளம், PNB டவர்ஸ், எண்.46-49, ராயப்பேட்டை நெடுஞ்சாலை, சென்னை - 600 014. தொலைபேசி: 044-28112261-90, மின்னஞ்சல்: ZS8341@pnb.bank.in

2002ன் ஆண்டு கடனீட்டுச் சொத்துக்கள் மீதான உரிமை (அமலாக்க) விதிகள் 8 (6) மற்றும் 9 (1) ன் கீழ் அசையாச் சொத்திற்கான மின் ஏல விற்பனை குறித்து பொதுமக்களுக்கான அறிவிப்பு

கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல், நிதிச்சொத்துகளை சீரமைத்தல், கடனீட்டுச் சொத்துக்கள் மீதான உரிமை அமலாக்கச் சட்டம் 2002ன் 8 (6) & 9(1) ன் கீழ் பஞ்சாப் நேஷனல் வங்கியிடம் அடமானத்திலுள்ள ஈடுபெற்ற அசையா சொத்துக்கள் விற்பனை

பஞ்சாப் நேஷனல் வங்கியில் அடமானத்தில் வைக்கப்பட்டுள்ள கீழ்கண்ட சொத்துக்களை பஞ்சாப் நேஷனல் வங்கியின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியால் அடையாள சுவாதீனத்தில் எடுக்கப்பட்டு கீழே குறிப்பிடப்பட்டுள்ள கடன்தாரர்கள்/ஜாமீன்தாரர்கள்/அடமானதாரர்களிடமிருந்து பெற வேண்டிய கீழே குறிப்பிட்டுள்ள கடன் தொகை மற்றும் அதற்கான வட்டி, இதர செலவுகளையும் வசூலிப்பதற்காக கீழே குறிப்பிட்டுள்ள அசையாச் சொத்துக்களை "உள்ள இடத்தில் உள்ளவாறு", "உள்ளது உள்ளவாறு" மற்றும் "எந்த நிலையில் உள்ளதோ அந்த நிலையிலேயே" என்ற அடிப்படையில் 18.08.2026 அன்று மின் ஏல விற்பனை செய்யப்படும். என இதன் மூலம் பொது மக்களுக்கும் மற்றும் குறிப்பாக கடன்தாரர்கள்/ஜாமீன்தாரர்கள் மற்றும் அடமானதாரர்களுக்கும் அறிவிக்கப்படுகிறது.

கடன்தாரர் / அடமானதாரர்கள் பெயர் மற்றும் முகவரி : M/s. Lakhari Resources Private Limited (பிரதிநிதியாக அதன் இயக்குநர் திரு. இராமநாதன் சந்திரசேகரன்) எண்.5/2(3/2), முருகேசன் தெரு, T. நகர், சென்னை -6000017. 2. திரு. இராமநாதன் சந்திரசேகரன் (இயக்குநர்/ஜாமீன்தாரர்/அடமானதாரர்- Lakhari Resources Private Limited) குடியிருப்பு முகவரி எண்-4, 57 வது தெரு, அசோக் நகர், சென்னை – 600083. 3. திருமதி. சாலை விஷ்ணுபிரியா, (இயக்குநர்/ஜாமீன்தாரர்/ அடமானதாரர்- Lakhari Resources Private Limited) குடியிருப்பு முகவரி எண்– 19/33,10வது அவென்யூ, அசோக் நகர், சென்னை – 600083. 4. திரு. R. சுந்தராஜன் (ஜாமீன்தாரர் / அடமானதாரர்- Lakhari Resources Private Limited) குடியிருப்பு முகவரி எண்- 3/31 C, ஓராண்டி அம்மன் கோவில் அவென்யூ, வேளச்சேரி, சென்னை -600042. 5. திருமதி. கவிதா சுந்தராஜன், (ஜாமீன்தாரர்/அடமானதாரர்- Lakhari Resources Private Limited) குடியிருப்பு முகவரி எண்- 3/31 C ஓராண்டி அம்மன் கோவில் அவென்யூ, வேளச்சேரி, சென்னை -600042.

வங்கிக்கு செலுத்த வேண்டிய மொத்த நிலுவைத் தொகை 30.06.2026 அன்றுள்ளபடி ரூ. 13,13,19,166.09 (ரூபாய் பதிமூன்று கோடியே பதிமூன்று இலட்சத்து பத்தொன்பது ஆயிரத்து நூற்று அறுபத்து ஆறு மற்றும் பைசா ஒன்பது மட்டும்) அதனுடன் மொத்த தொகை செலுத்தும் வரையிலான வட்டி மற்றும் இதர கட்டணங்கள். 29.08.2024; அன்று கோரிக்கை அறிவிப்பு U/S 13(2) அளிக்கப்பட்டது; 05.11.2024 அன்று சுவாதீன அறிவிப்பு U/S 13(4) அளிக்கப்பட்டது;

அடமான சொத்துக்களின் விபரங்கள்:

பிணைச் சொத்தின் விவரங்கள்: இணைப்பு -I –Daffodils (திருமதி. சாலை விஷ்ணுபிரியா அவர்களுக்குச் சொந்தமான சொத்து): காஞ்சிபுரம் மாவட்டம், ஒரகடம், வடக்குப்பட்டு "B" கிராமம், சர்வே எண்கள்.1020/1,1020/2 & 1036/4C இல் அடங்கிய Daffodils மனைப்பிரிவின் 18 மேம்படுத்தப்பட்ட மனைகளின் மனை எண்கள்1,2,17,19, S2,47-C,49-C,50-A,50-B,51-C,52-A,52-B,53-A,53-B,69,95-A,95-C, 95-D இல் அமைந்துள்ள பரப்பளவு 18952சதுர அடி (17,600 + பிரிக்கப்படாத பங்கு 1352) திருமதி. சாலை விஷ்ணுபிரியா அவர்களின் பெயரில் அமைந்துள்ள சொத்து, பின்வருமாறு எல்லைகள்: "Daffodils மனைப்பிரிவு" இல் உள்ள சொத்துக்களின் எல்லைகள்:

| வ எண் | மனை எண் | பரப்பளவு சதுர அடி | எல்லைகள் | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | வடக்கில் | தெற்கில் | கிழக்கில் | மேற்கில் |
| 1 | 1 | 1788 | சாலை | மனை எண் 29 | சாலை | மனை எண் 2 |
| 2 | 2 | 1800 | சாலை | மனை எண் 28 | மனை எண் 1 | மனை எண் 3 |
| 3 | 17 | 1800 | மனை எண் 13 | சாலை | மனை எண் 18 | மனை எண் 16 |
| 4 | 19 | 1800 | மனை எண் 11 | சாலை | மனை எண் 20 | மனை எண் 18 |
| 5 | S2 | 2021 | சாலை | மனை எண் 15 | மனை எண் 14 | சாலை |
| 6 | 47-C | 680+UDS103 | மனை எண் 45 & 44 | மனை எண் 47 B | மனை எண் 48 B | மனை எண் 46 |
| 7 | 49-C | 680+UDS 103 | மனை எண் 43 & 42 | மனை எண் 49 B & சாலை | மனை எண் 50 B | மனை எண் 48 B |
| 8 | 50-A | 600+UDS 103 | மனை எண் 50 B | சாலை | மனை எண் 51 A & 51 B | சாலை |
| 9 | 50-B | 600+UDS 103 | மனை எண் 42 | மனை எண் 50 A | மனை எண் 51 C & 51 B | மனை எண் 49 C & சாலை |
| 10 | 51-C | 680+UDS103 | மனை எண் 41 & 40 | மனை எண் 51 B & சாலை | மனை எண் 52 B | மனை எண் 50 B |
| 11 | 52-A | 600+UDS 103 | மனை எண் 52 B | சாலை | மனை எண் 53 A | சாலை |
| 12 | 52-B | 600+UDS 103 | மனை எண் 40 | மனை எண் 52 A | மனை எண் 53 A & 53 B | மனை எண் 51 C & சாலை |
| 13 | 53-A | 760 | மனை எண் 53 B | சாலை | சாலை | மனை எண் 52 A & 52 B |
| 14 | 53-B | 660+UDS 380 | மனை எண் 39 | மனை எண் 53 A & சாலை | மனை எண் 54 | மனை எண் 52 B |
| 15 | 69 | 573 | மனை எண்68 | காலி நிலம் | மனை எண்-95 | சாலை |
| 16 | 95-A | 618 | மனை எண் 95 B | காலி நிலம் | மனை எண்-95 | சாலை |
| 17 | 95-C | 700+UDS 125 | சாலை | காலி நிலம் | மனை எண் 95 D | மனை எண் 95 B & 95 A |
| 18 | 95-D | 640+UDS 125 | சாலை | காலி நிலம் | மனை எண் 95 E | மனை எண் 95 C |

**ரிசர்வ் தொகை: ₹ 1,77,39,000/- டெபாசிட் செய்ய வேண்டிய தொகை (EMD): ₹17,73,900/- உயர்வு தொகை: ₹ 1,00,000/-**

இணைப்பு -II – Harsha Homes (திருமதி. சாலை விஷ்ணுபிரியா அவர்களுக்குச் சொந்தமான சொத்து): தமிழ்நாடு, காஞ்சிபுரம் மாவட்டம், ஒரகடம், எண்.248, வடக்குப்பட்டு "B" கிராமம், சர்வே எண்கள், 1036/2A1,1036/1A,1B,2A1,1037/4C,4D & 5B- இல் அடங்கிய M/S Harsha Homes, மனைப்பிரிவின் 26 மேம்படுத்தப்பட்ட மனைகளின் மனை எண்கள்1-D,3-A,3-C,6-B,6-C,6-D,7-A,8-B,8-C,8-D,8-E,9-D,9-E,10,13,21,26-B,28-A,28-B,31-B,31-c,32-B,32-C,39-A,39-B,39-C இல் அமைந்துள்ள பரப்பளவு 20,342சதுர அடி (18,261 + பிரிக்கப்படாத பங்கு 2081) திருமதி. சாலை விஷ்ணுபிரியா அவர்களின் பெயரில் அமைந்துள்ள சொத்து, பின்வருமாறு எல்லைகள்: "Harsha Homes மனைப்பிரிவு" இல் உள்ள சொத்துக்களின் எல்லைகள்:

| வ எண் | மனை எண் | பரப்பளவு சதுர அடி | எல்லைகள் | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | வடக்கில் | தெற்கில் | கிழக்கில் | மேற்கில் |
| 1 | 1-D | 712 +UDS 206 | காலி நிலம் | மனை எண் 1 E | பூங்கா | பொதுப்பாதை |
| 2 | 3-A | 704+UDS 210 | மனை எண் 3 B | சாலை | பொதுப்பாதை | மனை எண் 4 E |
| 3 | 3-C | 700+UDS 210 | காலி நிலம் | மனை எண் 3 B | பொதுப்பாதை | மனை எண் 4 D |
| 4 | 6-B | 704+UDS 218 | மனை எண் 6C | மனை எண் 6 A | பொதுப்பாதை | மனை எண் 7 A & 7 D |
| 5 | 6-C | 776+UDS 218 | காலி நிலம் | மனை எண் 6 B | பொதுப்பாதை | மனை எண்-7 D |
| 6 | 6-D | 786+UDS 218 | காலி நிலம் | மனை எண் 6 E | மனை எண் 5C & 5 B | சாலை |
| 7 | 7-A | 770 | மனை எண் 7 D | சாலை | மனை எண் 6A & 6 B | மனை எண் 7B |
| 8 | 8-B | 638 | மனை எண் 8C | மனை எண் 8A | சாலை | மனை எண் 8 E & 8 D |
| 9 | 8-C | 685 | காலி நிலம் | மனை எண் 8B | சாலை | மனை எண் 8 D |
| 10 | 8-D | 672+UDS 200 | காலி நிலம் | மனை எண் 8E | மனை எண் 8 C & 8 B | பொதுப்பாதை |
| 11 | 8-E | 670+UDS 200 | மனை எண் 8D | சாலை | மனை எண் 8A & 8 B | சாலை |
| 12 | 9-D | 655+UDS 200 | காலி நிலம் | மனை எண் 9 E | சாலை | மனை எண் 9 B & 9 C |
| 13 | 9-E | 670+UDS 200 | மனை எண் 9 D | சாலை | சாலை | மனை எண் 9 A & 9 B |
| 14 | 10 | 575 | மனை எண் 11 | சாலை | சாலை | மனை எண் 13 |
| 15 | 13 | 575 | மனை எண் 12 | சாலை | மனை எண் 10 | சாலை |
| 16 | 21 | 575 | மனை எண் 20 | சாலை | மனை எண் 18 | சாலை |
| 17 | 26-B | 800 | சாலை | காலி நிலம் | மனை எண் 26 C | மனை எண் 26 A |
| 18 | 28-A | 800 | சாலை | காலி நிலம் | மனை எண் 28 B | மனை எண் 27 C |
| 19 | 28-B | 800 | சாலை | காலி நிலம் | மனை எண் 28 C | மனை எண் 28 A |
| 20 | 31-B | 725 | சாலை | காலி நிலம் | மனை எண் 31 C | மனை எண் 31 A |
| 21 | 31-C | 687 | சாலை | காலி நிலம் | சாலை | மனை எண் 31 B |
| 22 | 32-B | 717 | சாலை | காலி நிலம் | மனை எண் 32 C | மனை எண் 32 A |
| 23 | 32-C | 722 | சாலை | காலி நிலம் | மனை எண் 33 A | மனை எண் 32 B |
| 24 | 39-A | 800 | சாலை | காலி நிலம் | மனை எண் 39 B & 39 C | மனை எண் 38 C |
| 25 | 39-B | 740 | சாலை | மனை எண் 39 C | சாலை | மனை எண் 39A |
| 26 | 39-C | 603 | மனை எண் 39 B | காலி நிலம் | சாலை | மனை எண் 39 A |

**ரிசர்வ் தொகை: ₹ 1,90,40,000/- டெபாசிட் செய்ய வேண்டிய தொகை (EMD): ₹ 19,04,000/- உயர்வு தொகை: ₹ 1,00,000/-**

இணைப்பு - III – (Raj Enclave) (திரு. R. சுந்தராஜன் & திருமதி. கவிதா ஆகியோர்களுக்குச் சொந்தமான சொத்து): வேளச்சேரி வட்டம், வேளச்சேரி கிராமத்தின்; கிராம நத்தம் சர்வே எண் 438/1, பட்டாவின்படி T. சர்வே எண்.3, பிளாக் எண்.72 இல் அடங்கிய சென்னை - 600042, ஓராண்டியம்மன்கோவில் அவென்யூ /தெரு, பழைய கதவு எண்.31C, புதிய கதவு எண்.3, இல் அமைந்துள்ள பரப்பளவு (இடத்தில் உள்ளபடி 1845சதுர அடி) ஆவணத்தின்படி 1940 சதுர அடியில் பிரிக்கப்படாத பங்கு 526சதுர அடி நிலம் அதனுடன் ஒரு கார் நிறுத்தும் இடம் (பொதுப் பரப்பு உட்பட) "Raj Enclave", என்ற பெயரில் உள்ள கட்டிடத்தின் முதல் தளத்தில் பரப்பளவு 817சதுர அடி கட்டிடப்பரப்பு கொண்ட குடியிருப்பு ஃப்ளாட் எண்.C, நிலம் மற்றும் கட்டிடம் அதனைச் சார்ந்த அனைத்து துண்டு மற்றும் பகுதி - திரு. சுந்தராஜன் & திருமதி. கவிதா சுந்தராஜன் ஆகியோரின் பெயரில் அமைந்துள்ள சொத்து, எல்லைகள்: வடக்கில் : திருமதி. வெள்ளையம்மாள் அவர்களின் உரிமைப்பெற்ற நிலம்; தெற்கில் : திரு. துரை அவர்களின் உரிமைப்பெற்ற நிலம்; கிழக்கில் : திரு. நடேச நாயகர் அவர்களின் உரிமைப்பெற்ற நிலம்; மேற்கில் : சாலை நாற்பரப்புகள்: வட புறம்:40 அடி; தென் புறம்: 40 அடி; கிழக்கு புறம்:48 ½ அடி; மேற்கு புறம்: 48 ½ அடி.

**ரிசர்வ் தொகை: ₹ 47,27,000/- டெபாசிட் செய்ய வேண்டிய தொகை (EMD): ₹ 4,72,700/- உயர்வு தொகை: ₹ 1,00,000/-**

வங்கிக்கு தெரிந்தவரை வில்லங்கங்கள் ஏதேனும் இருப்பின்: ஏதுமில்லை.

**மின் ஏல விற்பனை நடைபெறும் தேதி 18.08.2026, நேரம்: காலை 11 முதல் மாலை 4 மணி வரை**

| EMD செலுத்த கடைசி தேதி17.08.2026 ; நேரம்: மாலை 5.00 மணி வரை | அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியிடம் முன் அனுமதி பெற்று சொத்துக்களை பார்வையிடுதல் : 10.08.2026 |
|---|---|

**தொடர்புக்கு: திரு. VNS சந்திரசேகர் அச்சல்லா, முதன்மை மேலாளர் / அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி, தொலைபேசி எண்: 8328235168**

விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள்: விற்பனையானது கடனீட்டுச் சொத்துக்கள் மீதான உரிமை (அமலாக்கம்) விதிகள் 2002ல் பரிந்துரைக்கப்பட்ட விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளை பொருத்து மற்றும் பின்வரும் கூடுதல் நிபந்தனைகளுக்கு உட்பட்டது. (1). "எங்கு உள்ளதோ உள்ள நிலையில்" மற்றும் "என்ன உள்ளதோ உள்ள நிலையில்" மற்றும் "என்னவெல்லாம் உள்ளதோ உள்ள நிலையில்" என்ற அடிப்படையில் சொத்துக்கள் விற்பனை செய்யப்படும். (2). அட்டவணையில் மேற்குறிப்பிட்ட பிணைச் சொத்துக்களின் விவரங்கள் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியின் சிறந்த தகவலுக்குக் கூறப்பட்டுள்ளன, எனினும் இந்த பிரகடனத்தில் ஏதேனும் பிழை, தவறான அறிக்கை அல்லது விடுபதல்கள் ஏதேனும் இருப்பின் ஆகியவற்றிற்கு அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி பதிலளிக்கமாட்டார். (3). விற்பனையானது கீழே கையொப்பமிட்டவரால் 18.08.2026 அன்று காலை 11.00 மணி முதல் மாலை 04.00 மணி வரை https://www.baanknet.com என்ற இணையதளம் மூலமாக நடத்தப்படும். (4). விற்பனையின் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு https://www.baanknet.com & www.pnb.bank.in ஆகிய இணையதளங்களில் காணலாம்.

SARFAESI சட்டம் 2002 விதி 8 (6) & 9 (1) ன் கீழ் இந்த சட்டரீதியான அறிவிப்பு.

தேதி : 14.07.2026
இடம் : சென்னை

முதன்மை மேலாளர் / அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி
பஞ்சாப் நேஷனல் வங்கி, பிணையக் கடன் வழங்கிய வங்கி



**சுவாதீன அறிவிப்பு**

இப்பவும், கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கச் சட்டம் 2002-இன் (54/2002) ("மேற்சொன்ன சட்டம்") கீழ், கீழே கையொப்பம் இட்டுள்ளவர் கீழ்க்காணும் அட்டவணையின் டிரஸ்ட்களின் (இனி "ஆர்சில்" என குறிப்பிடப்படும்) டிரஸ்டி என்ற தகுதியில் செயல்படும் அசட் ரீகன்ஸ்ட்ரக்ஷன் கம்பெனி (இந்தியா) லிமிடெட் நிறுவனத்தின் அதிகாரப்பூர்வ அலுவலராக இருக்கிறபடியால் மேற்சொன்ன சட்டத்தின் பிரிவு 13(12) அதனுடன் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை (அமலாக்கம்) விதிகள் 2002, ("மேற்சொன்ன விதிகள்") விதி 3-இன் கீழுள்ள உரிமைகளைப் பயன்படுத்தி ஒரு கோரிக்கை அறிவிப்பினை கடன்தாரர் ஜாமீன்தாரர்கள் மற்றும் அடமானதாரர்களுக்கு அனுப்பி கீழ்க்காணும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள கடன் கணக்கு எண்ணின் கீழான தொகையை திருப்பிக் கட்டுமாறு கோரினார்.

கடன்தாரர் / ஜாமீன்தாரர்(கள்) / அடமானதாரர்(கள்) ஆகியோர் மேற்சொன்ன தொகையினைத் திருப்பிச் செலுத்தத் தவறியபடியால் கடன்தாரர் / ஜாமீன்தாரர்(கள்) / அடமானதாரர்(கள்) ஆகியோருக்கு குறிப்பாகவும் பொதுமக்களுக்கு பரவலாகவும் இதன் மூலம் தெரிவிப்பது யாதெனில், ஆர்சில் நிறுவனத்தின் அதிகாரப்பூர்வ அலுவலர் என்ற முறையில் கீழே கையொப்பம் இட்டிருப்பவர் மேற்கூறிய சட்டத்தின் பிரிவு 13-இன் உட்பிரிவு (4) மற்றும் அதனுடன் மேற்கூறிய விதிகளில் விதி 8-இன் கீழுள்ள தன் உரிமைகளைப் பயன்படுத்தி கீழே விவரிக்கப்பட்டுள்ள அசையா சொத்துகளை "உள்ளது உள்ளபடி & உள்ளது என்னவோ அது என்ற அடிப்படையில் "கீழே குறிப்பிடப்பட்டுள்ள நாளில் சுவாதீனம் எடுத்துக் கொண்டுள்ளார்.

| வ. எண். | கடன்தாரர் பெயர் / ஜாமீன்தாரர்கள் & கடன் கணக்கு எண் | 13(2) அறிவிப்பு நாள் / தொகை (ரூபாய்) | சுவாதீன நாள் & வகை |
|---|---|---|---|
| 1. | கடன்தாரர்: திரு/திருமதி. விஜி S திரு/திருமதி. ரூபியா (என்ற) ரூபியா A (கடன் கணக்கு எண்: LAP1SPD000079325) ARCIL-TRUST-2026-013 | HL/LAP வசதி தொடர்பாக, 22.01.2026 அன்றுள்ளபடி) ரூ.11,94,963/- (ரூபாய் பதினொரு லட்சத்து தொண்ணூற்று நான்காயிரத்து தொள்ளாயிரத்து அறுபத்து மூன்று மட்டும்) இதனுடன் சேர்த்து தொகையை கட்டிமுடிக்கும்வரை/ கடனை அடைக்கும்வரையிலான மேல் வட்டி மற்றும் கட்டணங்கள் சகல நிகழ் செலவுகள், செலவு, கட்டணங்கள் போன்றவற்றுடன். அறிவிப்பு நாள்: 27/01/2026 | அடையாள சுவாதீன நாள் 10.07.2026 |
| சொத்தின் உரிமையாளர் : திருவள்ளூர் மாவட்டம், திருத்தணி வட்டம், திருத்தணி கிராமக் கணக்கு, திருவள்ளூர் பதிவு மாவட்டம், திருத்தணி சார்பதிவு மாவட்டம், சர்வே எண் 235/12- மொத்தம் 4 சென்ட் நிலப்பரப்பில் அடங்கிய கிழக்கு திசையில் உள்ள, 2 சென்ட் (872 சதுர அடிக்குச் சமமானது) பரப்பளவு கொண்ட காலி வீட்டு மனை கடனீட்டு சொத்தாகும் 2 சென்ட் (872 சதுர அடிக்குச் சமமானது ) நிலம் மற்றும் அதில் அமைந்துள்ள கட்டட எல்லைகள்: வடக்கு - கிருஷ்ணன், தேசம்மாள் நிலம்; தெற்கு - தெரு; கிழக்கு - சேகர், கல்யாணி நிலம்; மேற்கு - மேகவர்ணம் நிலம். அளவீடுகள்: கிழமேல் வடபுறம் - 35.85 அடி; கிழமேல் தென்புறம் - 35.85 அடி; தென்வடல் கிழபுறம் - 30 அடி; தென்வடல் மேல்புறம் - 30 அடி. மொத்தம் 2 சென்ட் 872 சதுர அடிக்குச் சமம். | | | |
| 2. | கடன்தாரர்: திரு/திருமதி. அமரன் யோகேஷ், காலஞ்சென்ற திரு/திருமதி. அமரன் (பிரதிநிதித்துவம்: திரு/திருமதி அமரன் யுவராணி, திரு/திருமதி அமரன் யோகேஷ்)& திரு/திருமதி. அமரன் யுவராணி (கடன் கணக்கு எண்: HL05THU000013257) ARCIL-TRUST-2026-013 | HL/LAP வசதி தொடர்பாக, 22-01-2026 அன்றுள்ளபடி ரூ.17,79,831/- (ரூபாய் பதினேழு லட்சத்து எழுபத்தொன்பதாயிரத்து எண்ணூற்று முப்பத்தொன்று மட்டும்), இதனுடன் சேர்த்து தொகையை கட்டிமுடிக்கும்வரை/ கடனை அடைக்கும்வரையிலான மேல் வட்டி மற்றும் கட்டணங்கள் மேலும் சகல நிகழ் செலவுகள், செலவு, கட்டணங்கள் போன்றவற்றுடன். அறிவிப்பு நாள்: 27/01/2026 | அடையாள சுவாதீன நாள் 10.07.2026 |
| சொத்தின் உரிமையாளர்: அனைத்து இன்றியமையாத பகுதிகளும் பாகங்களும் கொண்ட 1880 சதுர அடி பரப்பளவுள்ள காலி வீட்டு மனை அமைவிடம்: ப்ளாட் எண் 10 அமையப்பெற்ற சர்வே எண் 370/2A மற்றும் 2B பட்டாவின்படி உட்பிரிவு புதிய சர்வே எண்கள் 370/2A6 மற்றும் 370/2A7, பட்டா எண் 399-இன்படி "திருபுரசுந்தரி நகர்" என அழைக்கப்படும லேஅவுட் இது, திருவள்ளூர் மாவட்டம், திருவள்ளூர் வட்டம், கொண்டஞ்சேரி கிராமத்தில் அமைந்துள்ளது காஞ்சிபுரம் பதிவு மாவட்டம், பேரம்பாக்கம் சார் பதிவு மாவட்டத்துக்கு உட்பட்டது இதன் எல்லைகள் பின்வருமாறு: வடக்கு: மனை எண் 9, தெற்கு: காலி நிலம், கிழக்கே 20 அடி சாலை, மேற்கு: 20 அடி நடைபாதை. அளவீடுகள்: கிழமேல் வடபுறம் - 40 அடி, கிழமேல் தென்புறம் - 40 அடி, தென்வடல் கிழபுறம் - 47 அடி, தென்வடல் மேல்புறம் - 47 அடி. மொத்தம் 1880 சதுர அடி. | | | |
| 3. | கடன்தாரர்: திரு/திருமதி. பவித்ரா G திரு/திருமதி. ஞானசேகர் K த/பெ கருணாநிதி திரு/திருமதி. கீதா V (கடன் கணக்கு எண்: LAP1PLL000087123) ARCIL-TRUST-2026-013 | HL/LAP வசதி தொடர்பாக 22.01.2026 அன்றுள்ளபடி ரூ.15,12,363/- (ரூபாய் பதினைந்து லட்சத்து பன்னிரண்டாயிரத்து முந்நூற்று அறுபத்து மூன்று மட்டும்) இதனுடன் சேர்த்து தொகையை கட்டி முடிக்கும் வரை/ கடனை அடைக்கும்வரையிலான மேல் வட்டி மற்றும் கட்டணங்கள் சகல நிகழ் செலவுகள், செலவு, கட்டணங்கள் போன்றவற்றுடன். அறிவிப்பு நாள்: 27/01/2026 | அடையாள சுவாதீன நாள் 10.07.2026 |
| சொத்தின் உரிமையாளர்: சர்வே எண் 44/1 (பகுதி), சர்வே எண் 219/6 கடனீட்டு சொத்தாக உள்ள நிலம் மற்றும் கட்டடம்; இதன் பரப்பளவு 5 சென்ட்க்கு சமமான 3503 சதுர அடி இது மொத்தமுள்ள 4811 சதுர அடியில் அடங்கியதாகும். அமைவிடம்: எண் 59, ராஜபத்மபுரம் கிராமம், திருத்தணி வட்டம், திருவள்ளூர் மாவட்டம் இது திருவள்ளூர் பதிவு மாவட்டம் மற்றும் திருவள்ளூர் சார் பதிவு மாவட்டம் எல்லைக்குள் அமைந்துள்ளது. 4811 சதுர அடியில் அடங்கிய 3503 சதுர அடி பரப்பளவு கொண்ட நிலம் மற்றும் அதில் அமைந்துள்ள கட்டட எல்லைகள்: வடக்கு - முனிரத்தினம் வீடு; தெற்கு - சாலை; கிழக்கு - புனிதா மனை; மேற்கு - சாலை. அளவீடுகள்: கிழமேல் வடபுறம் - 112.75 அடி; கிழமேல் தென்புறம் - 111.75 அடி; தென்வடல் கிழபுறம் - 32 அடி; தென்வடல் மேல்புறம் - 28 14 அடி. மொத்தம்: 3503 சதுர அடி. | | | |
| 4. | கடன்தாரர்: திரு/திருமதி. முருகன் G திரு/திருமதி. காமாச்சி M (கடன் கணக்கு எண்: HL05THU000010370) ARCIL-TRUST-2026-013 | HL/LAP வசதி தொடர்பாக 22-01-2026 அன்று ரூ.19,90,820/- (ரூபாய் பத்தொன்பது லட்சத்து தொண்ணூறாயிரத்து எண்ணூற்று இருபது மட்டும்), இதனுடன் சேர்த்து தொகையை கட்டிமுடிக்கும்வரை/ கடனை அடைக்கும்வரையிலான மேல் வட்டி மற்றும் கட்டணங்கள் சகல நிகழ் செலவுகள், செலவு, கட்டணங்கள் போன்றவற்றுடன். அறிவிப்பு நாள்: 27/01/2026 | அடையாள சுவாதீன நாள் 10.07.2026 |
| சொத்தின் உரிமையாளர்: அனைத்து இன்றியமையாத பகுதிகளும் பாகங்களும் கொண்ட 450 சதுர அடி பரப்பளவுள்ள காலி வீட்டு மனை அமைவிடம்: அமையப்பெற்ற பழைய சர்வே எண்.437/6, உட் பிரிவு புதிய சர்வே எண்.437/40, பட்டா எண். 188 இன் படி அமைவிடம்: எண்.110, விடையூர் கிராமம், கடம்பத்தூர் ஊராட்சி ஒன்றியம், திருவள்ளூர் வட்டம், திருவள்ளூர் மாவட்டம் இது காஞ்சிபுரம் பதிவு மாவட்டம் திருவள்ளூர் சார் பதிவு மாவட்டத்துக்கு உட்பட்டது. எல்லைகள் பின்வருமாறு : எல்லைகள்: வடக்கு-ராமு ரெட்டி நிலம், தெற்கு நரசிம்மா ரெட்டி நிலம், கிழக்கு சரவணன் நிலம், மேற்கு நாராயணசாமி ரெட்டி நிலம். அளவீடுகள்: கிழமேல்வடபுறம் -18 அடி, கிழமேல் தென்புறம் -18 அடி, தென்வடல் கிழபுறம் -25 அடி, தென்வடல் மேல்புறம்-25 அடி. மொத்தம் 450 சதுர அடி. இனம் எண்.II- அனைத்து இன்றியமையாத பகுதிகளும் பாகங்களும் கொண்ட 1412 சதுர அடி பரப்பளவுள்ள காலி வீட்டு மனை அமைவிடம்: அமையப்பெற்ற பழைய சர்வே எண்.437/6, உட் பிரிவு புதிய சர்வே எண்.437/40, பட்டா எண். 188 இன் படி அமைவிடம்: எண்.110, விடையூர் கிராமம், கடம்பத்தூர் ஊராட்சி ஒன்றியம், திருவள்ளூர் வட்டம், திருவள்ளூர் மாவட்டம் இது காஞ்சிபுரம் பதிவு மாவட்டம் திருவள்ளூர் சார் பதிவு மாவட்டத்துக்கு உட்பட்டது. எல்லைகள் பின்வருமாறு : எல்லைகள்: வடக்கு-ராமு ரெட்டி நிலம், தெற்கு நரசிம்மா ரெட்டி நிலம், கிழக்கு சாலை, மேற்கு காமாச்சி நிலம். அளவீடுகள்: கிழமேல் வடபுறம் - 56% அடி, கிழமேல் தென்புறம் - 56% அடி, தென்வடல் கிழபுறம் - 25 அடி, தென்வடல் மேல்புறம் - 25 அடி. மொத்தம் 1412 சதுர அடி. | | | |
| 5. | கடன்தாரர்: திரு/திருமதி கணேசன் ரகு திரு/திருமதி விநாயகி G (கடன் கணக்கு எண்: HL05THU000046455) ARCIL-TRUST-2026-013 | HL/LAP வசதி தொடர்பாக (22.01.2026 அன்றுள்ளபடி) ரூ. 20,19,980/- (ரூபாய் இருபது லட்சத்து பத்தொன்பதாயிரத்து தொள்ளாயிரத்து எண்பது மட்டும்) இதனுடன் சேர்த்து தொகையை கட்டிமுடிக்கும்வரை/ கடனை அடைக்கும்வரையிலான மேல் வட்டி மற்றும் கட்டணங்கள் சகல நிகழ் செலவுகள், செலவு, கட்டணங்கள் போன்றவற்றுடன். அறிவிப்பு நாள்: 27/01/2026 | அடையாள சுவாதீன நாள் 10.07.2026 |
| சொத்தின் உரிமையாளர் : அமைவிடம்: அமையப்பெற்ற பழைய சர்வே எண் 227/15, 17 மற்றும் புதிய சர்வே எண் 227/2A1A பரப்பளவு 1080 சதுர அடி, மனை எண் 51. பட்டா எண் 1524-இன் படி உட்பிரிவு புதிய சர்வே எண் 227/37- கடனீட்டு சொத்தானது 1080 சதுர அடி பரப்பளவு கொண்ட ஒரு காலி வீட்டு மனையாகும். அமைவிடம்: ஸ்ரீகிருஷ்ணாபுரம் கிராமக் கணக்கு, வெள்ளத்தூர் குரூப், RK பேட்டை வட்டம், திருவள்ளூர் மாவட்டம். இது திருவள்ளூர் பதிவு மாவட்டத்தின் சார் பதிவு மாவட்ட எல்லைக்குள் அமைந்துள்ளது (முன்பு காஞ்சிபுரம் என அழைக்கப்பட்டது). எல்லைகள்: வடக்கு: 22 அடி சாலை, தெற்கு: சிதம்பரம் வீடு, கிழக்கு: மனை எண் 52, மேற்கு: மனை எண் 50. அளவீடுகள்: கிழமேல் வடபுறம் - 27 அடி, கிழமேல் தென்புறம் - 27 அடி, தென்வடல் கிழபுறம் - 40 அடி, தென்வடல் மேல்புறம் - 40 அடி. மொத்தம் 1080 சதுர அடி | | | |

கடன்தாரர் / ஜாமீன்தாரர்(கள்) / அடமானதாரர்(கள்) ஆகியோருக்கு குறிப்பாகவும் பொதுமக்களுக்குப் பரவலாகவும் இதன் மூலம் எச்சரிக்கையிடுவது யாதெனில், முன்சொன்ன அசையா சொத்தை ஆர்சில் சட்டப்பூர்வமாக சுவாதீனம் எடுத்துள்ளது. சர்ஃபாசி சட்டம் 2002, பிரிவு 13( 13)-இன் கீழ், இந்த அறிவிப்பு கிடைத்த பிறகு கடன்தாரர் / ஜாமீன்தாரர்(கள்) / அடமானதாரர்(கள்) ஆகியோர் அல்லது வேறு யாரும் ஆர்சிலின் எழுத்துப்பூர்வ ஒப்புதல் இன்றி விற்பனை குத்தகை அல்லது வேறுவகையில் உரிமை மாற்றம் / பராதீனம் செய்யக்கூடாது. வேறு எந்தவொரு பேரமோ ஒப்பந்தமோ வைத்துக் கொள்ளகூடாது. மீறினால் அது ஆர்சில் நிறுவனத்துக்கு மேற்சொன்ன தொகையை மேற்சொன்ன தொகை மீதான ஒப்பந்த விகிதத்திலான எதிர்கால வட்டியுடன் நிகழ் செலவுகள், செலவு, கட்டணங்கள் போன்றவை சேர்த்து செலுத்துவதற்கு கட்டுப்பட்டதாகும்.

கடனுக்கு ஈடான சொத்துகளை மீட்பது தொடர்பான கால அவகாசம் தொடர்பான மேற்படி சட்டம் பிரிவு 13, உட்பிரிவு(8)-இன் ஷரத்துகளை கவனத்தில் கொள்ளுமாறு கடன்தாரர்கள் / ஜாமீன்தாரர்கள் / அடமானதாரர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

இடம்: சென்னை
நாள்: 10.07.2026

ஒம்/- அதிகாரப்பூர்வ அலுவலர்
அசெட் ரீகன்ஸ்ட்ரக்ஷன் கம்பெனி (இந்தியா) லிமிடெட்
(ARCIL-TRUST-2026-013-என்ற Arcil டிரஸ்ட்டின் டிரஸ்டி)

Arcil Premier ARC
**அசெட் ரீகன்ஸ்ட்ரக்ஷன் கம்பெனி (இந்தியா) லிட்.,**
CIN - U65999MH2002PLC134884, இணையத்தளம்: www.arcil.co.in
பதிவு அலுவலகம்: தி ரூபி, 10ஆவது தளம், 29, சேனாபதி பாபட் மார்க், தாதர் (மேற்கு), மும்பை-400028. தொ.பே.: +91 2266581300


ஞாயிற்றுக்கிழமைதோறும் தினமணி கதிர் இளமை! புதுமை! இனிமை!